Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.77/2019

Dated 21-01-2026
Deposition of witness for : PW 17

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அடைக்கல ஆரோக்கியசாமி டேவிட் | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | பிரான்சிஸ் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

All **Accused present**

Ld. D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது காவல் உதவி ஆய்வாளராக தஞ்சாவூர் கிழக்கு காவல்நிலையத்தில் வேலைபார்க்கிறேன். கடந்த 18.1.2018 அன்று இரவு 11.00 மணிக்கு தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலையத்தில் பணியில் இருந்த போது ஆறுமுகம் மகன் சின்னராசு என்பவர்

நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகார் கொடுத்தார். அதை நான் வாங்கி உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து நிலைய கு.எண்.18/2018 சட்டபிரிவுகள் 147, 148, 294(பி) 324, 302 இ.த.ச பிரிவுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.20 ஆகும்.

2) கொடுங்குற்றம் என்பதால் ஆய்வாளர் பார்வைக்கு ஒரு நகலை வைத்தேன். ஆய்வாளருக்கு உதவியாக சம்பவ இடமான ஆதிமாரியம்மன் கோவில் அருகில் உள்ள டாஸ்மாக் கடை அருகில் உள்ள இடத்திற்கு சென்று வந்தேன்.

3) மேலும் முதல் தகவல் அறிக்கையை துரித தபால் மூலமாக காவலர் 909 என்பவர் மூலமாக நீதித்துறை நடுவர் எண் 2 தஞ்சாவூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன்.

4) இது பற்றி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

அனைத்து எதிரிகள் தரப்பிலும் குறுக்கு விசாரணை

1) ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். ஆய்வாளர் என்னை விசாரித்தபோது ஆதிமாரியம்மன் கோவில் அருகில் உள்ள டாஸ்மாக் கடை அருகில் உள்ள இடத்திற்கு சென்று வந்த விபரத்தை சொன்னேன்.

2) காவல்நிலையத்தில் இருந்து நீதித்துறை நடுவர் எண்.2 தஞ்சாவூர் நீதிமன்றம் சுமார் 5.கி.மீ. தூரத்தில் இருக்கிறது. நீதித்துறை நடுவர் எண். 2 அவர்களின் வீடு அந்த காவல்நிலையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தூரத்தில் இருக்கிறது. மோட்டார் சைக்கிளில் சென்றால் சுமார் 5 நிமிடத்தில் போய்விடலாம் என்றால் தவறு. 10 நிமிடம் ஆகும்.

3) அச்சுமுதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவர் அவர்களால் 19.1.2018 அன்று மதியம் 1.25 மணிக்கு பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான்.

4) 18.01.2018 அன்று பொதுநாட்குறிப்பு பதிவு செய்த பணியில் யார் இருந்தது என்று ஞாபகம் இல்லை.

5) அச்சு முதல் தகவல் அறிக்கையில் காலம் எண்.3 C ல் பொதுநாட்குறிப்பில் பதிவு எண், நேரம், குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

6) புகார் கொடுக்க புகார்தாரருடன் 4,5 பேர் வந்தார்கள். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது. புகார் என்னிடம் கொடுக்கும்போது எழுதிய நிலையில் கொண்டு வந்து கொடுத்தார். எங்கு வைத்து எழுதினார் என்று எனக்கு தெரியாது.

7) சாதாரணமாக புகார் கொடுத்தவுடன் அந்த புகாரை பெற்று உடனடியாக முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து அதன்பிறகு குற்ற எண் கொடுப்பீர்களா என்றால் அவ்வாறு செய்யமாட்டோம். முதலில் குற்ற எண் கொடுத்து அதன்பிறகு முதல்தகவல் அறிக்கை பதிவு செய்வோம்.

8) அ.சா.ஆ.20 ல் பெறப்பட்ட நேரம் அதில் இல்லை என்றால் பெறப்பட்டவுடன் பதிவு செய்ததால் பதிவு செய்த நேரத்தை நான் எழுதி இருக்கிறேன்.

9) அதில் பெறப்பட்ட நேரம் குறிப்பிடப்படவில்லை என்றால் நான் அதை பெற்றவுடன் வழக்கு பதிவு செய்ததால் பெற்ற நேரத்தை அதில் நான் குறிப்பிடவில்லை.

10) எழுதாத வெள்ளை தாளில் புகார்வாதியிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக்கொண்டு

அதில் உள்ள விபரங்களை வழக்கிற்கு தகுந்தாற்போல் பின்னால் பதிவு செய்துகொண்டேன் என்றால் தவறு.

11) நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் அ.சா.1 காவல் நிலையத்திற்கு வந்து எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும் 19.1.2018 மதியம் 12.00 க்குதான் புகார் என்னால் பெறப்பட்டது என்றால் அதை நான் மறுக்கிறேன்.

12) புகாரில் புகார்வாதி சம்பவ இடத்திற்கு சென்றபோது எதிரிகள் அருவாள், வாள், போன்ற ஆயுதங்களை கைகளில் வைத்துகொண்டு தன்னை சம்பவ இடத்திற்கு வரவிடாமல் தடுத்தார்கள் என்று குறிப்பிட்டு சொல்லி உள்ளார்களா என்றால் சொல்லி உள்ளார்கள். அதுபோல் எதிரிகளிடம் எதுவும் செய்யவேண்டாம் என்று கத்தினேன் என்று அ.சா.1 சொன்னதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. அதுபோல் சம்பவம் முடிந்த பிறகு எதிரிகள் சம்பவ இடத்தில் இருந்து இரு சக்கர வாகனத்தில் போய்விட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

13) அ.சா.1 - 18.1.2018 அன்று மதியம் 12 மணிக்கு வாய்மொழியாக என்னிடம் ஒரு புகார் கொடுத்தார் என்றும் அதை நான் இந்த வழக்கிற்கு எதிராக இருந்ததால் மறைத்துவிட்டேன் என்றால் தவறு.

14) புகாரில் சுரேஸ் என்ற எதிரி இறந்தவரின் தலையில் வெட்டியதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

15) இறந்துபோன அப்பு என்ற ஜெயகாந்தன் மீது எங்கள் காவல்நிலையத்தில் சரித்திர பதிவு

குற்றவாளி என்று பதிவு இருக்கிறது என்றால் சரியல்ல. ஆனால் அவர் மீது முன் வழக்குகள் இருக்கிறது. எங்கள் காவல்நிலையத்தில் A பிளஸ் ரவுடி என்று பதிவாகி இருக்கிறது என்றும் அதை வேண்டுமென்றே மறைக்கிறேன் என்றால் தவறு.

16) நானும் ஆய்வாளரும் கலந்து பேசி அ.சா.ஆ.20 புகாரை உருவாக்கினோம் என்றும் என்னிடம் வாதி கொடுத்த முதல் புகாரை நாங்கள் மறைத்துவிட்டோம் என்றால் தவறு.

மறுவிசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/-P. வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்